கேட்டீர்கள், எவ்வளவு நிதி வந்திருக்கிறதென்று ஒரு கேள்வியை எழுப்பினார்கள். 2021–2022 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழைக்கு மொத்தம் நாங்கள் கேட்ட தொகை 6 ஆயிரத்து 230 கோடியே 45 இலட்சம் ரூபாய். ஆனால், வந்த தொகை 352 கோடியே 85 இலட்சம் ரூபாய்தான். இதிலே தற்காலிக நிவாரணத்திற்காக 1,510 கோடி ரூபாய் நாங்கள் கேட்டிருந்தோம். அந்தத் தொகைகூட கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறுபடியும் அதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலச் சீரமைப்புக்கு என்று 4,219 கோடி ரூபாய் உள்ளிட்டு மொத்தம் ரூ.6,230 கோடியே 45 இலட்சம் கேட்புத் தொகை கேட்டிருக்கிறோம். வந்தது ரூ.352 கோடியே 85 இலட்சம்.

முற்பகல் 10–15

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஈ) சோளிங்கர், பள்ளி மாணவியர் இருவருக்கு Covaxin தடுப்பூசியால் பாதிப்பு—நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் நகரத்திலுள்ள திருமதி எத்திராஜம்மாள் முதலியாண்டார் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வரும் யோகலட்சுமி என்பவருக்கு சிறார்கள் தடுப்பூசி திட்டத்தின்கீழ், 4–1–2022 அன்று பள்ளி வளாகத்தில் Covaxin தடுப்பூசி போடப்பட்டது. பிறகு நோய்வாய்ப்பட்டு தொடர் சிகிச்சை பெற்றும், பலனில்லாமல் இரண்டு கண் பார்வையும் இழந்துள்ளார். அதே பள்ளியில் 9 ஆம் வகுப்பு பயின்று வரும் பிரியதர்ஷினி என்பவருக்கு 2–2–2022 அன்று பள்ளி வளாகத்தில் போடப்பட்ட Covaxin தடுப்பூசியால் உடல்நிலை பாதிக்கப்பட்டு தொடர் சிகிச்சை மேற்கொண்டும் பலனில்லாமல் இரண்டு கைகளும், இரண்டு கால்களும் செயலிழந்துள்ளன. இது தடுப்பூசி போட்டதாலோ அல்லது வேறு காரணமாகவோ என்று தெரியவில்லை. அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கூட நேரில் சென்று அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து வந்திருக்கிறார். அந்த இரு குடும்பங்களைச் சார்ந்தவர்கள் மிக ஏழ்மையான கூலித் தொழிலாளிகள் ஆவார்கள்.

2022 மார்ச் 24] [திரு. சு. ரவி]

அந்த இரு குடும்பங்களும் என்ன செய்வது என்று தெரியாமல் இடிவிழுந்ததுபோல் இடிந்துபோய் உள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்படி இருவரும் பூரண குணமடைய உயர்தர சிகிச்சையும், இருவரின் குடும்பத்திற்கு தலா ரூ.25 இலட்சம் நிவாரண உதவித் தொகையும் வழங்க வேண்டுமென்று நான் இந்த அவையின் கவனத்தை ஈர்த்து, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பூசி இயக்கம் என்பது 2021, ஜனவரி திங்கள் 16 ஆம் தேதி, இந்தியா முழுவதிலும் தொடங்கப்பட்டது. தொடங்கப்பட்ட அந்த நாளிலிருந்து 15 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு* Covaxin, Covishield, Sputnik *போன்ற தடுப்பூசிகள் இந்தியா முழுவதும் இதுவரை 180 கோடிக்கும் மேற்பட்ட தடுப்பூசிகள் போடப்பட்டிருக்கின்றன. அவற்றில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி,* Covishield, Covaxin, Sputnik *மற்றும் 12 வயது முதல் 14 வயதினருக்கான* Corbevax *என்ற தடுப்பூசி கடந்த ஒரு வார காலமாகவும் போடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில், தமிழகத்தில் இதுவரை 10 கோடியே 34 இலட்சத்து 28 ஆயிரத்து 372 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டிருக்கின்றன.*

ராணிப்பேட்டை மாவட்டம், திருமதி எத்திராஜம்மாள் முதலியாண்டார் அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் படித்து வரும் 17 வயது, ஆர். யோகலட்சுமி மற்றும் அதே பள்ளியில் படித்து வரும் 15 வயது, பி. பிரியதர்ஷினி என்பவர்கள் முறையே கடந்த 4—1—2022 மற்றும் 2—2—2022 அன்றைக்கு Covaxin *தடுப்பூசியினை செலுத்திக் கொண்டனர். தடுப்பூசி செலுத்தப்பட்டவுடன் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. பின்னர் சில நாட்கள் கழித்து, ஆர். யோகலட்சுமி என்கின்ற மாணவிக்கு கண் பார்வை பிரச்சினை இருப்பதாகத் தெரிவித்ததன்பேரில், உடனடியாக சோளிங்கர் மருத்துவமனையிலும், வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும், வேலூர்* C.M.C. *மருத்துவமனையிலும் உயர் சிகிச்சை தேவைப்பட்டதால் எழும்பூர் அரசு கண் மருத்துவமனையிலும், சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையிலும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.*

[திரு. மா. சுப்பிரமணியன்] [*2022 மார்ச் 24*

அதோடு பிரியதர்ஷினி என்கின்ற மாணவிக்கு உடல் பலவீனம் பிரச்சினையாக, Guillain–Barre syndrome *என்று தெரிவித்ததன்பேரில் உடனடியாக சோளிங்கர் மருத்துவமனை, வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேலூர்* C.M.C. *மருத்துவமனை மற்றும் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் அவருக்கு தொடர் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கூறிய இரண்டு மாணவிகள் மற்றும் அவர்கள் பெற்ற சிகிச்சைகள் குறித்து 12–3–2022 அன்று மாவட்ட மற்றும் மாநில அளவிலான தடுப்பூசிகளைச் செலுத்தியதற்குப் பிறகு வரும் பின்விளைவுகளைக் கண்காணிக்கும் குழு,* Adverse Events Following Immunization Committee *கூடி அனைத்து மருத்துவ ஆவணங்களையும் பரிசீலித்து, அதன்பிறகு அவர்கள் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். அப்படி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் யோகலட்சுமிக்கு* COVID–*19 தடுப்பூசி செலுத்தியதற்குப் பிறகு ஏற்பட்ட பின்விளைவுகளுக்கும், தடுப்பூசி செலுத்தியதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனவும், பிரியதர்ஷினிக்கு* Guillain–Barre syndrome *என்னும் நோயாக இருக்கலாம் என்ற நிலையில், தடுப்பூசி செலுத்தியதால் ஏற்பட்ட பாதிப்பா என அறிய, இவ்வறிக்கை மற்றும் இந்தத் தகவல்கள் மேல் பரிசீலனைக்காக* National Adverse Events Following Immunization Committee, New Delhi–*க்கு அனுப்பப்பட்டுள்ளன. எனவே, பாதிக்கப்பட்ட இருவருக்கும் சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் வணக்கத்திற்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, தொடர்ந்து உயர் சிகிச்சை அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இது சென்றவுடன், அவர் உடனடியாக 'நீங்களும், கதர்த் துறை அமைச்சர் அவர்களும் அடுத்த வாரமே, அந்த இரு குழந்தைகளின் வீட்டிற்குச் சென்று நிலைமையைப் பரிசீலித்து வாருங்கள்' என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அடுத்த வாரம் நானும், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களும் அந்தக் குழந்தைகளைச் சென்று பார்க்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது மேல் சிகிச்சை தேவைப்பட்டாலோ அல்லது எந்தவிதமான அரசு உதவி தேவைப்பட்டாலோ மாண்புமிகு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நிச்சயமாகச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*